## இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் - 2013

இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.2.2 இன் பிரகாரம், ஆண்டின் போது செலவிடப்பட்ட போதிலும், வேலை பூர்த்தி செய்யப்படாத செயற்திட்டங்களில் மூலதன தன்மையிலான செலவினம் முடிவுறா மூலதன மீதியொன்றாக இனங்காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி திகதியில் 20 சதவீதம் முடிவடைந்த செயல்முன்னேற்றம் உள்ள ரூபா 212.25 மில்லியன் செலவிடப்பட்டுள்ள சீ – சீரீ கட்டிடத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.3.1.9 இன் பிரகாரம், வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோருக்காக ஒவ்வொரு கடன்பட்டோரிடமிருந்து கடனை அறவிடும் இயலுமை வெவ்வேறாக மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு ஒதுக்கக்கூடிய அளவு தீர்மானிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு முரணாக மொத்தக் கடன்பட்டோருக்காக ரூபா 500.68 மில்லியன் வழமையான அறவிடமுடியாக்கடன் ஒதுக்கீடு (General Provision) செய்யப்பட்டிருந்தது.

(இ) கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.2.4 இன் பிரகாரம் இருப்பு கிரயம் அல்லது தேறிய கைக்கெட்டும் பெறுமதி என்பவற்றில் குறைவான பெறுமதியில் கணக்கிடப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட முடிவுப் பொருள் இருப்புக்கள் மற்றும் மூலப்பொருட்கள் இருப்புக்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யும் போது தேறிய கைக்கெட்டும் பெறுமதி கணக்கீடு செய்யாமல் கிரய பெறுமதி அடிப்படையில் மாத்திரம் இருப்பு பெறுமதி மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் மீதியில் ரூபா 496,541,127 பெறுமதியான அசாதாரண செலவு மீதியொன்றாக இருந்தமையால்

அத்திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் பெறுமதி ரூபா 496,541,127 ஆல் பற்றாக்குறையாக இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவுகளுக்கும் இடையில் அனைத்து திணைக்களங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு மீதிகள் ஆண்டின் இறுதியில் ஒன்றுடனொன்று இணக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும் அவை சரியாக இணக்கம் செய்யப்பட்டிராமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 96,088,486 தொகையான திணைக்களங்களுக்கு இடையிலான நடைமுறைக் கணக்கு வரவு மீதியொன்று நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தைக் கையளிக்காத தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரிய 799 பேர்ச் காணி ரூபா 79,615,000 இற்கு மதிப்பிடப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இக்காணி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களிலும் சொத்தொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 702.31 மில்லியன் தொகையான அரச மானியங்கள் பெறுவனவு நிதிக்கூற்றுக்களில் உரிமையாண்மையின் கீழ் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், அப்பெறுமதியில் ரூபா 555.18 மில்லியன் நடைமுறையல்லா பொறுப்புக்களின் கீழும் எஞ்சிய ரூபா 147.13 மில்லியன் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் இறுதியில் கூட்டுத்தாபனத்தின் பொறுப்புக் கணக்குகளில் ரூபா 393.03 மில்லியனான அசாதாரண வரவு மீதியொன்றும் சொத்துக் கணக்குகளில் ரூபா 67.74 மில்லியனான அசாதாரண செலவு மீதியொன்றும் அவதானிக்கப்பட்டமையால் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் நடைமுறைச் சொத்துக்களில் முறையே அப்பெறுமதிகளில் பற்றாக்குறையாக காணப்பட்டது.

(ஊ) சீ–சீரீ செயற்திட்டத்தின் விளம்பரம் மற்றும் ஏனைய செலவினங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 17.63 மில்லியன் தொகை அச்செயற்திட்டத்தின் செலவினமொன்றாக காண்பிப்பதற்குப் பதிலாக கூட்டுத்தாபனத்தின் பிரசித்தப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) 2012 ஆம் ஆண்டின் போது பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டின் போது ரூபா 278.68 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களின் குறைத்தெழுதிய பெறுமதி கருத்திற்கொள்ளப்பட்டிராத காரணத்தால் பிற்போடப்பட்ட வரி சொத்துக் கணக்கு ரூபா 33.44 மில்லியன் தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்த தவறினை பின்னோக்கி சீராக்கம் செய்யாமை அடிப்படையில் முன்னைய வருட இலாபம் ரூபா 33.44 மில்லியனால் மிகையாக கணக்கிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இலாபம் அப்பெறுமானத்தால் பற்றாக்குறையாக இருந்தது.

(ஏ) 2012 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட உப ஒப்பந்தச் செலவினக் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 21.26 மில்லியன் தொகையான செலவினம் அவ்வாண்டின் வருமானக் கூற்றிக்கு மாற்றப்படாமல் நடைமுறைச் சொத்தொன்றாக கணக்கிடப்பட்டிருந்ததுடன், அது மீளாய்வாண்டின் போதும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிறுத்தி வைக்கப்பட்ட வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2010 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சேவை வழங்கலொன்று தொடர்பில் இலங்கை கிரிக்கட் நிறுவகத்திடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 168.99 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரியை, இலங்கை கிரிக்கட் நிறுவகம் பெறுமதி சேர் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டதன் காரணமாக செலுத்த

முடியாதென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அத்தொகையை உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடமிருந்து மீள்நிரப்புவதற்கோ அல்லது அதற்காக ஏற்பாடொன்றை மேற்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) கணக்கு வைத்தல் வழுவொன்று காரணமாக 2011 ஆம் ஆண்டிலிருந்து மீள அறவிடப்பட வேண்டிய மீதியாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 13.54 மில்லியன் தொகையான தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரிக் கணக்கின் வரவு மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித சீராக்கமும் செய்யாமல் அவ்வாறே காணப்பட்டது.

### 2.2.3 நிதிக்கூற்றுக்களில் செய்யப்பட்ட அசாதாரண சீராக்கம்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 100.60 மில்லியன் முகப்புப் பெறுமதியுடன் கூடிய இயந்திரங்கள், பொறிகள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன அத்திகதியில் ரூபா 477.10 மில்லியனாக மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2013 சனவரி 01 ஆம் திகதி அச்சொத்துக்கள் ரூபா 240.70 மில்லியனாக மீண்டும் மீள்கணிப்பீடு செய்யப்பட்டிருந்தன.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடு மற்றும் இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 09 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் அதற்குரிய பட்டோலைகளில் குறிப்பிடப்பட்ட மீதிகளுடன் இணக்கம் செய்யப்படாமல் இருந்ததுடன், அவ்விரண்டிற்கும் இடையே ரூபா 732.23 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ரூபா 242.82 மில்லியன் பெறுமதியான கணக்கு விடயங்களிற்குரிய ஒவ்வொரு உருப்படிகளுக்கு எதிரே காண்பிக்கப்பட்ட எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயங்கள் | பெறுமதி | சமர்ப்பிக்கப்பட்டிராத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | |
| (அ) | நாரஹேன்பிட்டி செயற்பாட்டுப் பிரிவு வேறு இடத்திற்கு மாற்றப்பட்ட மையால் ஏற்பட்ட மூலதனப் பெறுவனவுகள் | 22.65 | பெறுவனவு மூலம் மற்றும் ஒப்படைப்புப் பதிவேடு உள்ளடக்கப்பட்ட கோவைகள் |
| (ஆ) | காசு மற்றும் காசிற்குச் சமனானவற்றில் உள்ளடக்கப்பட்ட 9934 ஆம் இலக்கக் கணக்கின் மீதி | 1.88 | வங்கிக் கூற்றுக்கள், வங்கிக் கணக்கிணக்கம், மீதிகளின் உறுதிப்படுத்தல் |
| (இ) | வரையறுக்கப்பட்ட இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் (கட்டார்) கம்பனியின் முதலீட்டுக் கணக்கின் மீதிகள் | 5.95 | வங்கி உறுதிப்படுத்தல்கள், வங்கிக் கூற்றுக்கள், வங்கிக் கணக்கிணக்கம், செலவு அறிவுறுத்தல் பத்திரம் |
| (ஈ) | நிறுத்தி வைக்கப்பட்ட தொகை (இயந்திர உபகரணப் பிரிவு) | 19.77 | பட்டோலைகள், காலப்பகுப்பாய்வு |
| (உ) | வேலை ஆரம்பிப்பு முற்பணம் (இயந்திர உபகரணப் பிரிவு) | 20.33 | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பிற்போடப்பட்ட வரிக்கான தற்காலிக வேறுபாடு (ஆதனங்கள், பொறியியல் மற்றும் உபகரணங்கள்) | 172.24 | பட்டோலைகள், கணிப்பீடு |
| | | ------------- | |
| | | 242.82 | |
| | | ======== | |

### 2.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் ரூபா 4,655.6 மில்லியன் தொகையான வியாபாரக் கடன்பட்டோர் மீதியில் 95 சதவீதத்திற்கு மேலான அளவு அரச நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியதாகக் காணப்பட்டதுடன், அதில் ரூபா 1,959.8 மில்லியன் தொகை 03 ஆண்டுகளை விட பழமைவாய்ந்த மீதிகளாக காணப்பட்டன.

(ஆ) 04 செயற்திட்டங்களுக்காக இலங்கை கிரிக்கட் நிறுவகத்திடமிருந்து 2011 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,133.82 மில்லியன் தொகை 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன், இலங்கை கிரிக்கட் நிறுவகத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மேற்குறித்த செயற்திட்டங்களுக்காக கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய பெறுமதி ரூபா 568.62 மில்லியன் தொகையாக இருந்தமையால் அதற்கிடையே ரூபா 565.20 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) கூட்டுத்தாபனத்தினால் 2000 ஆம் ஆண்டு முதல் நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 20.56 மில்லியன் தொகையும் அதிகாரசபையிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 5.36 மில்லியன் தொகையும் தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்ட போதிலும் அதனைச் செலுத்துவதற்கோ அல்லது அறவிடுவதற்கோ எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சேருவில வேலைத்தளத்தின் காசுப் பொறுப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிக்குரித்தாக அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 805,938 தொகை 2008 ஆம் ஆண்டு முதல் இதுவரை கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2010 ஆம் ஆண்டிலும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலும் பெற்றுக்கொண்ட ரூபா 1,088 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணத்தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மாற்றமுறாது காணப்பட்டன.

(ஊ) 2012 ஆம் ஆண்டின் இறுதியில் மதியுரைப் பிரிவின் அட்டுறு செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 125.46 மில்லியன் தொகையில் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்த மீதி ரூபா 124.89 மில்லியனாக இருந்தது.

(எ) 2011 ஆம் ஆண்டிலிருந்து செலுத்த வேண்டிய வரியாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 637.27 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(ஏ) 2011 ஆம் ஆண்டிலிருந்து 58 வேலைத்தளங்களில் உப ஒப்பந்தக்காரர்களுக்காக செலுத்த வேண்டியிருந்த ரூபா 9.61 மில்லியன் தொகையான மீதி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்தது.

(ஐ) 2010 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 131.8 மில்லியனான திரட்டிய கிரயமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்த நிர்மாணப் பிரிவின் 18 செயற்திட்டங்களுக்காக

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விலைப் பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்,விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்று டனான தொடர்பு | **இணக்கமின்மை** |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | கூட்டுத்தாபனத்தினால் வருடாந்த நிதிக் கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| | (i) நிதிப்பிரமாணம் 134(3) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 396 | வழங்கப்பட்டு 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த ரூபா 12,666,531 பெறுமதியான 19 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2011 பெப்ரவரி 11 ஆம் திகதிய பீஈடி/பீஈஎன்/2011/01 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | • பந்தி இலக்கம் 01 | மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் தனது நோக்கங்களுக்கு முரணாக ரூபா 21.36 மில்லியன் விளம்பரம் மற்றும் மேம்பாட்டுச் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. |
| | • பந்தி இலக்கம் 02 | மீளாய்வாண்டிற்காக பணிப்பாளர் சபை அங்கீகரித்த வருடாந்த விளம்பரப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டமொன்று கூட்டுத்தாபனத்திடம் காணப்படவில்லை. |
| (ஈ) | 2013 திசெம்பர் 09 ஆம் திகதிய 01/2013(i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ரூபா 15,950,500 தொகையான உபகாரப் படிகள் கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தன. |
| (உ) | 2009 மே 26 ஆம் திகதிய 39 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவு | சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமொன்று இல்லாமல் மீளாய்வாண்டிற்காக பொறியியல், உள்ளக வடிமைப்பு தொழில்நுட்பவியலாளர், அளவுத்திட்ட கணிப்பீடு போன்ற சேவை வகைகளுக்குரிய பதவிகளை வகிக்கும் ஊழியர்களுக்கு ரூபா 158.67 மில்லியன் படிகளாக வழங்கப்பட்டிருந்தன. |

| | | |
|---|---|---|
| (ஊ) | (i)2006 சனவரி 25 ஆம் திகதிய 08 ஆம் இலக்க கொள்வனவு முகவராண்மை சுற்றறிக்கையின் 4.2.1 ஆம் பந்தி | கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | 2006 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய 28(II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மற்றும் 2009 நவம்பர் 25 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இல்லாமல் பதவிகளை ஏற்படுத்துதல் அல்லது வெற்றிடங்களை நிரப்புதல் மேற்கொள்ள முடியாதென அறிவிக்கப்பட்டிருக்கையில் அங்கீகரிக்கப்படாத 32 பதவிகள் உருவாக்கப்பட்டு அதற்காக 197 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (ஏ) | 2011 பெப்ரவரி 14 ஆம் திகதிய டீஎம்எஸ்/ஈ3/43/4/265/1 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | மீளாய்வாண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பயிற்சி பெறாத ஊழியர்களின் எண்ணிக்கை 460 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை 706 ஆக இருந்தது. |
| (ஐ) | 2004 ஏப்ரல் 28 ஆம் திகதிய பீடீ/356/303/23 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் கடிதம் | சுய விருப்பில் ஓய்வுபெறும் திட்டத்தின் கீழ் திறைசேரியிலிருந்து பெறப்பட்டிருந்த பணத்தில் இழப்பீடு செலுத்தியதன் பின்னர் எஞ்சிய மீதியான ரூபா 20,278,812 தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் மீள அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு விளைவுகள் வரிக்கு முன்னர் ரூபா 148.57 மில்லியன் தொகையான தேறிய இலாபத்தைக் கொண்டிருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 225.91 மில்லியனாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது தேறிய இலாபத்தில் ரூபா 77.34 மில்லியன் தொகையான வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது செயற்பாட்டுப் பிரிவினதும் மதியுரை பிரிவினதும் செயற்பாட்டு இலாபம் முறையே ரூபா 216 மில்லியன் மற்றும் ரூபா 30 மில்லியனால் வீழ்ச்சியும் இயந்திர உபகரணப் பிரிவில் ரூபா 45 மில்லியன் செயற்பாட்டு நட்டமொன்றும் தேறிய இலாபத்தின் வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் மதியுரை, விசேட செயற்பாடு மற்றும் இயந்திர உபகரணம் ஆகிய பிரிவுகளில்

தேறிய செயற்பாட்டு இலாபம் முறையே 24 சதவீதம், 54 சதவீதம் மற்றும் 1,205 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தன.

(ii) 2011 ஆம் ஆண்டைத் தவிர ஏனைய அனைத்து ஆண்டுகளின் போதும் கூட்டுத்தாபனத்தின் வரிக்குப் பின்னர் தேறிய இலாபம் தொடர்ச்சியாக குறைவடைந்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது வரிக்குப் பின்னர் தேறிய இலாபத்தில் குறைவு 40 சதவீதமாக இருந்தது.

(iii) மீளாய்வாண்டின் போது சம்பளம், படிகள், ஒப்பந்த உழைப்பு மற்றும் அது தொடர்பான ஏனைய செலவினங்களாக கூட்டுத்தாபனம் செலவு செய்த செலவினம் ரூபா 2,136.75 மில்லியனாக இருந்ததுடன், அது விற்பனை புரள்வில் 27 சதவீதமாக இருந்தது.

(iv) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது மொத்தப் புரள்வின் சதவீதமாக தேறிய இலாபம் மற்றும் மொத்த விரிவான வருமானம் முறையே 42 சதவீதத்தாலும் 102 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(v) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது நிதிப் பொறுப்புக்கள் நிதிச் சொத்துக்களின் சதவீதமாக 8 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன், மொத்தப் பொறுப்புக்கள், உரித்திலும் மொத்த சொத்துக்களினதும் சதவீதமாக முறையே 15 சதவீதத்தாலும் 03 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிர்மாணிப்பு மற்றும் உதிரிப்பாகப் பிரிவிற்கு உரித்தான ஏக்கல, வெலிகந்த மற்றும் இரத்மலான ஆகிய வேலைத் தளங்களின் 2012 ஆம் ஆண்டில் ரூபா 41.33 மில்லியன் தொகையான செயற்பாட்டு இலாபம் மீளாய்வாண்டின் போது 7.06 மில்லியன் வரை 83 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. வேலைத்தளங்களின் விற்பனைக் கிரயம் தவிர ஏனைய செலவினங்களில் அதிகரிப்பு இதற்குத் தாக்கமளித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிர்மாணிப்பு உதிரிப்பாகங்கள் பிரிவிற்குரிய தங்கொட்டுவ செங்கற்கள் மற்றும் மர உற்பத்தி பிரிவு என்பன ரூபா 3.15 மில்லியன் நட்டமடைந்திருந்ததுடன், கடந்த 16 ஆண்டுகளில் 15 ஆண்டுகள் இப்பிரிவு நட்டத்தை ஈட்டியிருந்தது. அத்திரண்ட நட்டம் ரூபா 28.9 மில்லியனாக இருந்தது. வேலைத்தள வருமானம் அதிகரிக்கும் சதவீதத்தை விட விற்பனைக் கிரயம் அதிகரித்தமை இந்நிலைமைக்கு காரணமாக இருந்தது.

(இ) இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவிற்குரிய பேலியகொடை, இரத்மலான மற்றும் கொழும்பு ஆகிய 03 வேலைத்தளங்களில் 2012 ஆம் ஆண்டில் ரூபா 15.40 மில்லியனான செயற்பாட்டு இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 9.87 மில்லியன் வரை 55 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. மேற்குறித்த வேலைத்தளங்களில் விற்பனைக் கிரயம் தவிர ஏனைய செலவினங்கள் அதிகரித்தமை இதற்கு காரணமாக இருந்தன.

(ஈ) இயந்திர மற்றும் மின்சாரப் பிரிவிற்குரிய மாத்தளை டொலமைட் செயற்பாட்டுத் தளத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் மீளாய்வின் போது கடந்த 16 ஆண்டுகளில் 2006 ஆம் ஆண்டு தவிர்ந்த ஏனைய சகல ஆண்டுகளிலும் நட்டத்தில் இயங்கியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 0.85 மில்லியன் நட்டம்

1,521 சதவீதத்தால் அதிகரித்து மீளாய்வாண்டின் போது ரூபா 13.78 மில்லியன் நட்டமடைந்திருந்தது. மொத்தக் காலப்பகுதியில் அடைந்த திரண்ட நட்டம் ரூபா 52.2 மில்லியனாக இருந்தன. வேலைத்தள புரள்வு குறைவடைந்தமை மற்றும் விற்பனைக் கிரயம், ஏனைய செலவினங்கள் அதிகரித்தமை இந்நிலைமைக்கு தாக்கமளித்திருந்தது.

(உ) 2012 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மதியுரை சேவைப் பிரிவில் ரூபா 124.54 மில்லியன் இலாபம் மீளாய்வாண்டின் போது ரூபா 94.6 மில்லியன் வரை 24 சதவீத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது இயந்திர உபகரணப் பிரிவின் தலைமை அலுவலகம், கொலன்னாவ பிரதான களஞ்சியம் உட்பட பிரதேச அலுவலகங்கள் மற்றும் 15 வேலைத்தளங்கள் என்பன ஈட்டியிருந்த திரட்டிய நட்டம் ரூபா 98.16 மில்லியனாக இருந்தது.

(எ) இயந்திர உபகரணப் பிரிவின் ஹொரண, தம்புள்ள, அம்பாறை, கல்முனை, மற்றும் தமன்கடுவை பிரதேச அலுவலகங்கள் உட்பட மஹியங்கனை வேலைத்தளம் என்பன மீளாய்வாண்டின் போது எவ்வித வருமானத்தையேனும் ஈட்டாதிருந்த போதும், இவ்வேலைத்தளங்களிற்காக ரூபா 27.89 மில்லியன் செலவினமொன்று மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

(அ) மீளாய்வாண்டின் போது வங்கி பிணைப்பொறுப்பு அடிப்படையில் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொள்ளக்கூடிய வங்கி மேலதிகப் பற்று வசதிகள் ரூபா 473.7 மில்லியனிற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், ரூபா 555.75 மில்லியன் வரை மேலதிகப்பற்று வசதிகள் பெற்றுக்கொண்ட சந்தர்ப்பங்கள் இருந்தன. அதில் ரூபா 150 மில்லியன் தற்காலிக மேலதிகப் பற்றாக (Temporary Over draft) 30 சதவீத வட்டியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. ஆதலால் வங்கி மேலதிகப்பற்றிற்காக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்பட்ட மொத்த மேலதிகப்பற்று வட்டி ரூபா 77.66 மில்லியனாக இருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் காணப்படுகின்ற சீரற்ற திரவத் தன்மை அடிப்படையில் கூட்டுத்தாபனத்தினால் முன்னைய ஆண்டுகளில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 50 மில்லியன் தொகையான உண்டியல் கழிவு செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டின் போது 19 சதவீத வட்டி அடிப்படையில் ரூபா 100 மில்லியன் வரை அதிகரித்துக் கொண்டிருந்ததுடன், அதற்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட மொத்த வட்டி ரூபா 21.78 மில்லியனாக இருந்தது.

(இ) கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயம், 08 வேலைத்தளங்கள் பராமரித்துச் செல்லப்படும் 30 ஏக்கர் அளவிலான காணிக்காக சட்டரீதியான உரித்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 4.3 செயற்திட்ட முகாமைத்துவம் - எஸ்பலட் மற்றும் கிரெஷர் இயந்திர வேலைத்தள செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 372 மில்லியன் முதலீட்டுடன் தாபிக்கப்பட்ட விசேட செயற்பாட்டுப் பிரிவின் எஸ்பலட் மற்றும் கிரெஷர் இயந்திர வேலைத்தள செயற்திட்ட முகாமைத்துவத்தின் போதும் இச்செயற்திட்டத்தை செயற்படுத்தும் போதும் உரிய சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமை, செயற்திட்டத்தின் நோக்கம், செயற்பணி மற்றும் இலக்கு என்பவற்றை முறைப்படி இனங்காணாமை, தகைமையுள்ள ஊழியர் குழாமொன்று ஈடுபடுத்தப்படாமை, கிரய முகாமைத்துவம்

மற்றும் இயந்திர பாதுகாப்பு, பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக கவனம் செலுத்தாமை போன்ற விடயங்கள் தொடர்பில் கூட்டுத்தாபனத்தின் கவனம் செலுத்தாமையால் அது மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றியளிக்காதிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டிலும் மேற்குறித்த வேலைத்தளத்தின் நட்டம் முறையே 0.58 மில்லியன் மற்றும் ரூபா 4.85 மில்லியனாக இருந்தது.

(இ) வேலைத்தளத்தில் பொருத்தப்பட்டுள்ள ரூபா 203 மில்லியன் பெறுமதியான கிரேசர் இயந்திரம், மின்பிறப்பாக்கி மற்றும் தார் போக்குவரத்து வண்டி என்பன 2012 யூலை 18 ஆம் திகதி வரை பயன்பாடற்றுக் காணப்பட்டது.

### 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 யூன் 16 ஆம் திகதி முதல் 2012 யூன் 15 ஆம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதிக்காக மாத்திரம் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஆயுட் காப்புறுதியும் மருத்துவக் காப்புறுதியும் வழங்குவதற்காக 2011 யூன் 16 ஆம் திகதி ரூபா 5,885,178 கூட்டுத்தொகையான பணம் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இக் காப்புறுதிப் பூட்கை மீளாய்வாண்டிலும் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 1,339.3 மில்லியன் இறக்குமதிப் பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 735.6 மில்லியன் பெறுமதிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டு ஓராண்டு காலம் போன்ற குறுகிய காலப்பகுதியில் 45 சதவீதத்தால் பெறுமதி குறைவடைந்தமை காரணமாக அச்சொத்துக்களின் ஆரம்ப பெறுமதியின் நியாயமானதன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்தியடைய முடியாதிருந்தது.

### 4.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாடுகளில் நிர்மாணச் செயற்திட்டங்களை ஆரம்பித்து வருமானத்தை ஈட்டுவதற்கு கூட்டுத்தாபனம் முயற்சி எடுத்திருந்ததுடன் இதற்காக ரூபா 13 மில்லியன் தொகையான பணம் செலவிடப்பட்டிருந்தது. எனினும் எந்தவித வெளிநாடொன்றிலும் நிர்மாணமொன்றை ஆரம்பிக்கவோ, ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது எவ்வித வருமானத்தையேனும் உழைப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது.

(ஆ) வெளிநாடுகளில் நிர்மாண செயற்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக தாபிக்கப்பட்ட வ/ப இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் (கட்டார்) கம்பனியின் வங்கி கொடுக்கல் வாங்கல்களுக்காக தோஹா வங்கிக் கணக்கொன்றில் 2009 ஆம் ஆண்டில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 5,958,715 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீளப்பெற்றுக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது நிர்மாண ஒப்பந்தங்களைக் குறித்த காலத்தின் போது பூர்த்தி செய்யாததன் விளைவாக வேலைத் தாமதக் கட்டணமாக ரூபா 19.62 மில்லியன் தொகையைச் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு நேர்ந்திருந்தது.

(ஈ) நாடளாவிய ரீதியில் சிவில் வேலைகளை விரிவுபடுத்தும் நோக்கில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி 49 விற்பனை மேம்படுத்தல்

உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு அவர்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 16.93 மில்லியன் தொகை சம்பளமாகச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் மாத்தளை, தங்கொட்டுவ போன்ற பகுதிகளில் அமைந்துள்ள உற்பத்தி வேலைத்தளங்களில் விற்பனைப் புரள்வு மீளாய்வாண்டின் போதும் அதிகரிக்காதிருந்ததுடன், அவை தொடர்ந்து நட்டமடையும் நிலையில் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது வியாபார மேம்பாட்டுச் செலவினமாக ரூபா 35.74 மில்லியன் செலவிடப்பட்டிருந்த போதிலும் புதிய செயற்திட்டங்கள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.6 இழப்பும் நட்டமும்

மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் செயற்திட்டங்களின் ஒப்பந்தப் பெறுமதியை மிகைத்து கிரயத்தை ஏற்றதன் காரணமாக 34 செயற்திட்டங்களுக்காக ரூபா 186.96 மில்லியன் தொகையான நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

### 4.7 ஒப்பந்த நிர்வாகம்

நிர்மாணப் பிரிவின் பட்டியல் சமர்ப்பிக்கும் போது செலவிடப்பட்ட கிரயத்தை விட மிகவும் கூடிய பெறுமதியுடன் கூடிய பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு சேவை நாடுனர்களுக்கு சமர்ப்பித்த சந்தர்ப்பங்களும் செலவிடப்பட்ட கிரயத்தை விட மிகவும் குறைந்த பட்டியல் சமர்ப்பித்த சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. இந்நிலைமை நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் என்பவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைக்க வேண்டிய மற்றும் வாடிக்கையாளர்களுக்கு செலுத்த வேண்டிய பெறுமதிகள் அசாதாரணமான மிகை கணிப்பீட்டிற்கு காரணமாக இருந்தன.

### 4.8 கூட்டுத்தாபனத்தின் வளங்கள் ஏனைய அரச நிறுவனங்களுக்கு கையளித்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.4 ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் 36 வாகனங்கள் நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. வாகனங்களிற்கான எரிபொருள் செலவினமும் வாடகைக் கட்டணமுமாக ரூபா 28.73 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், அமைச்சிற்கு விடுவிக்கப்பட்ட 21 சாரதிகளுக்கு சம்பளம் மற்றும் மேலதிக நேர படிகளாக ரூபா 8.23 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வரிசை அமைச்சின் மூன்று ஒருங்கிணைப்பு செயலாளர்களுக்கும் வரிசை அமைச்சின் கீழுள்ள ஜனசெவன நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்பான ஐந்து ஊழியர்களுக்கும் சம்பளமாக முறையே ரூபா 02 மில்லியன் மற்றும் ரூபா 0.91 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலாக கூட்டுத்தாபனத்தின் 12 ஊழியர்கள் வரிசை அமைச்சிற்கு விடுவிக்கப்பட்டு அவர்களுக்காக ரூபா 4 மில்லியன் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.9 மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,883 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் 3,102 ஆக இருந்தமையால் 219 ஊழியர்கள் மிகையாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணியில் 611 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அங்கீகாரமின்றி ஒப்பந்த அடிப்படையில் 816 ஊழியர்களும் அமைய அடிப்படையில் 14 ஊழியர்களும் சேர்க்கப்பட்டதால் ஒட்டுமொத்த பதவியணியினர் 219 ஊழியர்களால் மிகைத்துக் காணப்பட்டன.

(ii) கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தின் 13 பதவிகளுக்குரிய 64 உத்தியோகத்தர்கள் 2008 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் இருந்ததுடன், அது கூட்டுத்தாபனத்தின் செயலாற்றலுக்கு நேரடியாக தாக்கமளித்திருந்தது.

(iii) கூட்டுத்தாபனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 14 பதவிகளுக்காக 2006 ஆம் ஆண்டிலிருந்து ஒப்பந்த அடிப்படையில் 96 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களின் ஊழியர் புரள்வு உயர் பெறுமானமொன்றைக் கொண்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு பூர்த்தியடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த வரைவு நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு 285 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2014 திசெம்பர் 10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2007 திசெம்பர் 18 ஆம் திகதிய பீஈடீ 47 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் பொது முயற்சிகள் திணைக்களத்தின் நல்லாளுகை தொடர்பான வழிகாட்டிக் கோவையின் 05 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், 2012 – 2015 காலப்பகுதிக்குரியதாக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் 2013-2016 வரையான காலப்பகுதிக்குரியதாக நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

(அ) 2012 – 2015 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினுள் மீளாய்வாண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய 08 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட வருடாந்த செயற்பாடுகளுக்கு உரித்தாக ஒவ்வொரு செயற்பொறுப்பு உத்தியோகத்தர்களின் எய்த வேண்டிய இலக்குகளும் செயற்பாடுகளும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய இலக்குகள் பொருண்மையான பெறுமதிகளுடன் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம், செலவினங்களுக்கிடையே கருத்திற் கொள்ளக்கூடிய முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5.5 ஆண்டறிக்கை**

கூட்டுத்தாபனத்தால் 2012 ஆம் ஆண்டிற்கு உரித்தான ஆண்டறிக்கை 2015 ஏப்ரல் 08 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) ஒப்பந்த கட்டுப்பாடு
(ஆ) முற்பணக் கட்டுப்பாடு
(இ) பொருட் பதிவேட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) மனித வள முகாமை
(ஊ) வரி முகாமைத்துவம்
(எ) கொள்வனவு செயற்பாடு